திரு. கே. வினயகம் : சங்கத் தலைவர் பொய்யாகக் குற்றஞ் சாட்டினார்களா, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது எல்லாம் வேறு விஷயம். சங்கத் தலைவர் சொன்னதைப்போல செயலாளர் நடக்கவில்லை ஏன்பதற்கு ரெக்கார்டு பூர்வமாக ஆதாரம் இருந்தால் அதைப் படிக்கவேண்டும். ஆதாரம் இல்லாது சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எவ்வாறு பதில் அளிக்க வேண்டும் என்பதற்கு அமைச்சருக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் முன்பே சொன்னபடி, செயலாளர், ரசாயன உர விற்பனையில் 59 டன் கையிருப்பு வைத்துக் கொண்டது, தம்முடைய ஆணைப்படிதான் என்று மாவட்ட ஆட்சியாளர் பதில் அளித்திருப்பதனால், நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் மாவட்ட ஆட்சியாளர் மீதுதான் எடுக்க வேண்டுமே தவிர, செயலாளர் மீது அல்ல.

அலுவலர் கூட்டுறவுப் பண்டகசாலை, திருமயம்

*256 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயத்தில் அமைந்திருந்த அலுவலர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூடப்பட்டுள்ளதின் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திருமயம் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை 1960-இல் இருந்து தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 23—9—1967-இல் முழுக்க செயல்படும் நிலை அற்றதாகிவிட்டது. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 85-வது பிரிவின் பிரகாரம் அந்தப் பண்டகசாலையை மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : திருமயம் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலையை மூடிவிடுவதற்கான காரணங்களை இந்த அரசு நன்கு ஆய்ந்ததா? அந்தக் காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் முதலிலேயே சொன்னபடி 1960-இல் இருந்தே தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 23—9—1967 அன்றைய நிலவரப்படி சங்கத்தின் சொத்து நிலவரங்களோடு பார்க்கிறபோது ரூ. 9,683-60 நட்டம் காணப்பட்டது. இப்படி அதுவே செயலற்றதாகிவிட்ட காரணத்தினால் மூடிவிட உத்தரவிடப்பட்டது.

Sri Kandaswami Temple Devasthanam

* 257 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the process adopted in the matter of appointment of trustees to the Devasthanam of Sri Kandaswami temple in the City of Madras ; and

(*b*) whether preference is shown to the community of Beri Chettier under a scheme framed by the High Court?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இது நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

திரு. கே. விநாயகம்: நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கைப்பற்றி கேள்வி போடப்போவதில்லை. ஆயினும் இப்படி ஒரு கோவிலுக்கு அறங்காவலர்களைப் போடும்போது ஒருசிலரையே போடவேண்டும் என்பது என்ன? கிட்டத்தட்ட ஏழு பேர்களைப் போடலாம் என்று இருக்கிறது. தெய்வ பக்தி உள்ளவர்களை பரவலாகப் போடுவதனால் கோவில்களில் பொதுமக்களுக்கு அதிக அக்கறை ஏற்பட வாய்ப்பு இராதா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: நான் இப்போதிருக்கிற நிலைமையைச் சொன்னேன். இனிமேல் செய்யவேண்டியதைப்பற்றி உறுப்பினர் குறிப்பிடுகிறார். அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யப் பட்டே போடப்படும்.

DR. H. V. HANDE: Sir, will the Hon. Minister tell us, which Kandaswami Temple he is referring to? There are two Kandaswami temples in the City, one in the Mint Street and another in Park Town. Will the Hon. Minister also tell us whether they have a policy of appointing only those persons who are interested in these activities and who are fostering these activities, as trustees of temples and whether the persons who have absolutely no connection with these temples and who have no interest in these temples, are also recommended as trustees? What is the exact attitude taken by the Ministry in connection with the appointment of trustees and will the Hon. Minister explain it clearly to this House?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: ஒரு அறங்காவலருக்கு இருக்கவேண்டிய தகுதிகள் என்ன, என்ன என்று சட்டப்படி வரை யறுத்திருக்கிறோம். முழு விவரமும் இப்போது என்னிடம் இல்லை. என்றாலும் யாருக்கு இந்து மதத்தில் நம்பிக்கை இருக்கிறதோ அவரே அறங்காவலராகப் போடப்படுவார்கள். மேலும் 25 வயதிற்குக் குறையாமல் 70 வயதுக்கு மேலே போகாமல் இருக்கவேண்டும். சித்த சுவாதீனம் உள்ளவராக, கூன், குருடு, செவிடு இல்லாதவராக, கிரிமினல் குற்றத்திற்காக தண்டனை அடையாதவராக, கோவில் நிலங்களை, சொத்துக்களை குத்தகை எடுக்காதவராக எல்லாம் இருக்க வேண்டும்.

ஸ்ரீ இராமேஸ்வரம் கோயில் திருப்பணி

*258 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இம்மாநிலத்திலுள்ள ஸ்ரீ இராமேசுவரம் கோயில் திருப்பணி களுக்காக "யுனெஸ்கோ" விடம் நிதியுதவி ஏதும் கேட்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: ஆம். இராமேஸ்வரத்தி லுள்ள ஸ்ரீ இராமநாதசுவாமி கோவில் "யுனெஸ்கோ" நிறுவனத் தால் உதவி அளிக்கப்படுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட இரண்டாவது கோவிலாகும்.